**<u>இயக்கூர்தி விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாயம், கோபிசெட்டிபாளையம்</u>**

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 03 -ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

MCOP.No. 76/2023

**ம.சா. 1**

**திரு. பழனிச்சாமி**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி**

எனக்கு அளிக்கப்பட்ட ஊனச்சான்றிதழ் நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யவேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை ( 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில்)**

விபத்து நடந்த ரோடானது கிழமேல் ரோடு என்றால் சரிதான். மேற்படி ரோட்டில் விபத்தை ஏற்படுத்தியதாக கூறும் நபர் மேற்கிலிருந்து கிழக்காக ஓரமாக வந்ததாக சொல்கிறேனா என்றால் ஆமாம். விபத்து குறித்து என் மகன் தான் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். புகாரானது விபத்து நடந்து 3 நாட்களுக்கு பின்னிட்டு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி புகாரில் நான் தெற்கிலிருந்து வடக்காக காசிபாளையம் வாய்க்கால் மேடு அருகே ரோட்டை கடந்தபோதுதான் விபத்து நடந்ததாக சொல்லியுள்ளார் என்றால் ஆமாம். விபத்தானது நான் தெற்கிலிருந்து வடக்காக ரோட்டை கடக்கும்போதுதான் ஏற்பட்டது என்றால் சரிதான். கிழமேல் ரோட்டின் வடபுற ஓரமாகத்தான் விபத்து நடந்தது என்றால் சரிதான். விபத்தானது இருசக்கர வாகன ஓட்டுநரின்

கவனக்குறைவால் ஏற்பட்டது என்று போலீசார் இன்றைய தேதி வரை இறுதி அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் அதை பற்றி தெரியவில்லை. விபத்தானது எனது கவனக்குறைவினால் ஏற்பட்டது இருசக்கர வாகன ஓட்டுநரின் கவனக்குறைவு இல்லை என்று போலீசார் என் மகன் கொடுத்த புகாரை சம்பவத்தை பொறுத்து தவறு என்று முடித்துவிட்டார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியவில்லை. விபத்து நடந்தவுடன் நான் கோபி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன் பின்னிட்டு பெருந்துறை ஐஆர்டி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். கோபி அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தேன் என்று காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணமானது எனக்கு எதிராக இருப்பதால் தான் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்தினால் எனக்கு கொடுங்காயம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. கொடுங்காயம் ஏற்பட்டது என்பதை காண்பிக்க மருத்துவ ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.2 ஆவணத்தில் எனக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை குறித்து கருத்து எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 08-03-2023 லிருந்து 21-03-2023 வரை பெருந்துறை ஐஆர்டி மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று விடுவிக்கப்பட்ட பிறகு நான் தொடர் சிகிச்சை எதுவும் எடுத்துக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் முழுவதுமாக குணமடைந்துவிட்டதால்தான் அவ்வாறு சிகிச்சை எதுவும் எடுத்துக்கொள்ளவில்லை அதனால் தான் ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் மேசன் வேலை செய்தும், விவசாய வேலை செய்தும், பால் வியாபாரம் செய்து மாதம் ரூ.20 ஆயிரம் சம்பாதித்ததாக

எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தை நான்தான் சாலையை கடக்கும்போது ஏற்படுத்திக்கொண்டேன் என்றும், விபத்திற்கு நான்தான் காரணம், 1ம் எதிர்மனுதாரர் காரணம் இல்லை என்பதால் 2ம் எதிர்மனுதாரர் எனக்கு இழப்பீடு கொடுக்கவேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. விபத்தை ஏற்படுத்திய நான் 2ம் எதிர்மனுதாரரிடமிருந்து இழப்பீடு கோரமுடியாது என்றும், அதனால் நான் தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீட்டு தொகை அதிகப்படியானது என்றால் சரியல்ல. எனக்கு இயலாமை ஏற்பட்டதாக வழக்கிற்காக மிகைப்படுத்தி சொலகிறேன் என்றால்சரியல்ல. எனக்கு நிரந்தர ஊனமோ, வருமான இழப்போ ஏற்படவில்லை என்றால் சரியல்ல. விபத்து எனது கவனக்குறைவால் ஏற்பட்டதால் தான் 3 நாட்கள் கழித்து புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல.